முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும், அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சுதந்திரமாகச் செயல்படுவதைத் தடுக்கும் வகையிலும் பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றக் கட்சியின் தலைவரும், மிக முக்கியமான உறுப்பினருமான மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உரிமையைப் பாதிக்கும் வண்ணம் இவர்களது செயல்பாடு அமைந்துள்ளது.

முற்பகல் 11-20

மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், சூலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. க. தினகரன் மற்றும் எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி மற்றும் 'இந்து' நாளிதழுக்கு 30-10-2012 அன்று பேட்டி அளித்த தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோர் அவை உரிமை மீறிய செயலில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது இந்தப் பிரச்சினையில் அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால் இதனை ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226-ன்கீழ் இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுத் தரக் கோரி தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவரைச் சந்தித்தது–முனைவர் செ.கு. தமிழரசன் அளித்த கடிதத்தை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் தனது 31-10-2012 நாளிட்ட கடிதத்தில், 30-10-2012 ஆம் நாளைய 'தினத்தந்தி', 'தினமணி', 'தினமலர்' மற்றும் 'தினகரன்' ஆகிய நாளிதழ்களின் நறுக்குகளை இணைத்து, மேற்குறிப்பிட்ட நாளிதழ்களில் சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நான்கு தே.மு.தி.க. சட்டமன்ற

2012 நவம்பர் 1] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாக சந்திக்க பேரவைத் தலைவரிடம் அனுமதி பெற்றுத் தர வேண்டி சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் கடிதம் கொடுத்ததாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதை எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். மேலும், அவர்கள் பேரவைக்கு வெளியே சென்று பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங்களிடம் அரசியல் நோக்கத்திற்காக, மலிவான விளம்பரம் தேடும் வகையில், பேரவைத் தலைவரின் பதவியை அரசியலாக்கும் வண்ணம் பேட்டியளித்துள்ள செயல் அவை உரிமை மீறிய செயலாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் என்பவர் சட்டமன்றத்தின் மிக உயர்ந்த மாட்சிமையும், இறையாண்மையையும் பேரவையின் மாண்பினையும், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் கட்டிக் காக்கும் பொறுப்புடையவர் என்று தெரிவித்து, தே.மு.தி.க. உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவது முதலமைச்சர் அவர்களது செயலாளர் அவர்கள்தான் என்பது தெரிந்தும், வேண்டுமென்றே இத்தகைய ஒரு கடிதத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு அளித்து அவரையே மாண்புமிகு முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுத் தருமாறு கோரியுள்ளது, மாட்சிமை கொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவருடைய பதவியின் கௌரவத்தைக் குறைப்பதாகவும், அப்பதவிக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும், பேரவைத் தலைவருடைய செயல்பாட்டினை மறைமுகமாகத் தரம் தாழ்த்தும் வகையிலும், பேரவைத் தலைவரின் உரிமையைப் பெரிதும் பாதிக்கிற வகையிலும் உள்ளது மட்டுமின்றி, அவையின் உரிமையைப் பாதிப்பதாகவும் உள்ளது என்றும் உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் தனது கடிதத்திலே தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த மேற்படி கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள தே.மு.தி.க. சட்டமன்றக் கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் உறுப்பினர்கள் திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன், திரு. து. முருகேசன், திருமதி ஆர். சாந்தி ஆகிய ஐந்து

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 1

உறுப்பினர்கள் மேற்கூறிய அவை உரிமை மீறல் குற்றத்திற்கு ஆளாகியுள்ளதால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்திலே கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக ஏற்கெனவே 31-10-2012 அன்று பேரவை விதி 226-ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி உள்ளதால் மேற்படி உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களுடைய 31-10-2012 ஆம் நாளிட்ட கடிதத்தினையும் அவை உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலகிருஷ்ணன், ஒரு நிமிடம் உட்காருங்கள். நீங்கள் சொன்னதற்கெல்லாம் அம்மா அவர்கள் சரியான பதிலைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு அம்மா அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) இன்று Zero hour-ல் உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகள், அம்மா அவர்களின் கவனத்தில் இருப்பதால் அவர்களே அதற்குப் பதில் சொல்வார்கள். Wait பண்ணுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

முற்பகல் 11-25

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவில் பங்கேற்க மேதகு குடியரசுத் தலைவர், ஆளுநர் இசைவு தெரிவித்துள்ளது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி 1952 ஆம் ஆண்டு அமைக்கப்